

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (20.6.2025) தலைமைச் செயலகத்தில், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, சிறப்பு திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் (பொறுப்பு) பிரதீப் யாதவ், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறைச் செயலாளர் வி. அருண் ராய், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (20.6.2025) தலைமைச் செயலகத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுப்பணித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் (பொறுப்பு) பிரதீப் யாதவ், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல் ஆனந்த், நிதித் துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், சிட்கோ தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ஆ.கார்த்திக், டான்சி தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் தர்மேந்திர பிரதாப் யாதவ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (20.6.2025) தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்.கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் எம். சாய்குமார், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, சிறப்பு திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் (பொறுப்பு) பிரதீப் யாதவ், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## புதிய அரசு கலை - அறிவியல் கல்லூரிகள் ... முதல்பக்கத் தொடர்ச்சி

செலவில் கட்டப்பட்டுள்ள துணை வேந்தர் குடியிருப்பு, 8 கோடியே 49 இலட்சம் ரூபாய் செலவில் உதவி பேராசிரியர்கள் குடியிருப்புகள் மற்றும் 6 கோடியே 56 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஆசிரியரல்லா பணியாளர்களுக்கான குடியிருப்புகள், என மொத்தம் 36 கோடியே 17 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் செலவிலான கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் உயர் கல்வித் துறை செயலாளர் சி.சமயமூர்த்தி கல்லூரி கல்வி ஆணையர் திருமதி. எ.சுந்தரவல்லி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக வேலூர் மாவட்டத்திலிருந்து நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், நாடாளுமன்ற உறுப்பினர் கதிர்ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் நந்தகுமார், திருமதி அமலு, கார்த்திகேயன், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி வி.ஆர். சுப்புலட்சுமி, மற்றும் திருவள்ளுவர் பல்கலைக் கழகத்திலிருந்து துணை வேந்தர் பேராசிரியர் டாக்டர் ஆறுமுகம், பதிவாளர் செந்தில்வேல்முருகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள்;

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலிருந்து நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, சட்டமன்ற உறுப்பினர்கள் தியாகராஜன், செ. ஸ்டாலின் குமார், சி.கதிரவன், மாவட்ட ஆட்சித் தலைவர் எம். பிரதீப் குமார், திருவண்ணாமலை மாவட்டத்திலிருந்து சட்டப்பேரவை துணைத் தலைவர் கு. பிச்சாண்டி, நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ. கிரி, பெ.சு.தி. சரவணன், மாவட்ட ஆட்சித் தலைவர் க. தர்ப்பகராஜ், கள்ளக்குறிச்சி மாவட்டத்திலிருந்து சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஜெ. மணிகண்ணன், த. உதயசூரியன், மாவட்ட ஆட்சித் தலைவர் எம்.எஸ். பிரசாந்த், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### டாஸ்மாக் தொடர்பான வழக்கு

# அமலாக்கத்துறையின் மேல் நடவடிக்கைக்குத் தடை!

## சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு!

சென்னை, ஜூன் 21–

டாஸ்மாக் தொடர்பான வழக்கில் அமலாக்கத்துறையின் மேல் நடவடிக்கைக்கு தடை விதித்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. வழக்கு தொடர்பாக பறிமுதல் செய்யப்பட்ட ஆவணங்களை திருப்பி ஒப்படைக்கவும் அமலாக்கத்துறைக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

டாஸ்மாக் வழக்கில் அமலாக்கத் துறையின் நடவடிக்கைகள் மீது சென்னை உயர்நீதிமன்றம் ஏற்கனவே கடும் அதிருப்தி தெரிவித்திருந்தது. போதுமான ஆவணங்கள், ஆதாரங்கள் இல்லாமலேயே அமலாக்கத் துறை நடவடிக்கை எடுத்து வருவதாக நீதிபதிகள் கண்டனம் தெரிவித்தனர்.

போதுமான ஆதாரங்கள் இல்லாமல், வீடுகளில் சீல் வைப்பதற்கு அமலாக்கத்துறைக்கு என்ன அதிகாரம் உள்ளது என கேள்வி எழுப்பிய நீதிபதிகள், அமலாக்கத்துறையின் வாதத்திற்கும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என தெரிவித்தனர். சட்ட விரோதமாக மேற்கொள்ளப்பட்ட ஒன்றை, சட்டப்பூர்வமாக மாற்ற முயற்சிக்க வேண்டாம் எனவும் அமலாக்கத் துறைக்கு நீதிபதிகள் கண்டனம் தெரிவித்தனர்.

இந்நிலையில், இதுதொடர்பான வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, அமலாக்கத்துறையின் மேல் நடவடிக்கைக்கு தடை விதித்து நீதிபதிகள் உத்தரவிட்டனர். வழக்கு தொடர்பாக பறிமுதல் செய்யப்பட்ட ஆவணங்களை திருப்பி ஒப்படைக்க வேண்டும் என்றும் அமலாக்கத்துறைக்கு நீதிபதிகள் உத்தரவு பிறப்பித்தனர்.

### இந்தியாவில் புல்டோசர் மூலம் வீடுகளை இடிக்கும் போக்கை

# உச்சநீதிமன்றம் தடுத்து நிறுத்தி உள்ளது!

## தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் தகவல்!

புதுடெல்லி, ஜூன் 21-

இத்தாலி நாட்டின் நீதிபதிகள் மத்தியில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் உரையாற்றினார். அப்போது பேசிய அவர், இந்தியாவில் புல்டோசர் நீதி என்று சில மாநிலங்களில் அதிகாரிகள் செயல்படுத்தி வந்த புல்டோசர் மூலம் வீடுகள் இடிப்பதை சுட்டி காட்டினார். இதனை உச்சநீதிமன்றம் கடந்த ஆண்டு தடுத்து நிறுத்தியதாக தெரிவித்தார். ஏதேனும் குற்றம் நடந்தால் உடனடியாக அதிகாரிகள் புல்டோசர் மூலம் வீடுகளை இடித்து வந்தனர். சட்ட நடைமுறைகளை பொருட்படுத்தாமல் குடிமக்களின் அடிப்படை உரிமைக்கு எதிராக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக கூறினார். உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பு மூலம் இதற்கு தடை விதித்துள்ளதாகவும் அதிகாரிகள் ஒருபோதும் நீதிபதியாக முடியாது என்றும் பி.ஆர். கவாய் குறிப்பிட்டார். வீடு என்பது குடிமக்களின் சமூக பொருளாதார உரிமை. சாதாரண மக்களுக்கு வீடு என்பது பல ஆண்டு கனவு, அது வெறும் சொத்து அல்ல ஒட்டு மொத்த குடும்பத்தின் உணர்வுகள், பாதுகாப்பு சம்பந்தப்பட்டது என்றும் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் குறிப்பிட்டுள்ளார்.

### வன்முறையால் பெரும் பாதிப்புக்குள்ளான

# மணிப்பூருக்கு சிறப்பு நிதியாக 1000 கோடி ரூபாய் வழங்க வேண்டும்!

## ஒன்றிய அரசுக்கு - மணிப்பூர் ஆளுநர் வலியுறுத்தல்!

இம்பால், ஜூலை 21–

வன்முறையில் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ள மணிப்பூருக்கு சிறப்பு நிதியாக ஆயிரம் கோடி ரூபாய் வழங்க வேண்டும் என்று ஒன்றிய அரசுக்கு அம்மாநில ஆளுநர் வலியுறுத்தியுள்ளார்.

ஒன்றிய அரசுக்கு மணிப்பூர் ஆளுநர் அஜய்குமார் பல்லா எழுதிய கடிதத்தில், வன்முறையால் பாதிக்கப்பட்டுள்ள மணிப்பூர் மாநிலத்தில் 2 ஆண்டுகளாக அமைதி திரும்பவில்லை என்று கூறியுள்ளார். இதனால், பல்வேறு பொருளாதார சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்ட அவர், அத்தியாவசியத் தேவைக்காக மணிப்பூர் மாநிலத்திற்கு ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்க வேண்டும் என்று கோரியுள்ளார். இதில், 500 கோடி ரூபாயை உடனடியாக வழங்கவும் வலியுறுத்தியுள்ளார்.

ஓய்வூதிய நிலுவைத் தொகை, பாதுகாப்பு ஏற்பாடுகள் உள்ளிட்ட செலவினங்களுக்கு சிறப்பு நிதி அவசியம் என்றும் மணிப்பூர் ஆளுநர் அஜய்குமார் பல்லா சுட்டிக்காட்டியுள்ளார். பாஜக ஆட்சியில் இருந்த மணிப்பூரில் கடந்த 2023 ஆம் ஆண்டு மே மாதம் ஏற்பட்ட வன்முறை காரணமாக இதுவரை இயல்புநிலை திரும்ப வில்லை. கலவரத்தில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். 60 ஆயிரம் பேர் தங்கள்வீடுகளைவிட்டு வெளியேறியுள்ளனர். 4 ஆயிரத்து 500க்கும் அதிகமான வீடுகளை தீ வைத்து எரிக்கப்பட்டன. மணிப்பூரில் உள்கட்டமைப்பு வசதிகள் முற்றிலும் சேதமடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

### நெல்லை கிழக்கு மாவட்டம் –

# இராதாபுரம் தெற்கு ஒன்றியக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் – சா.ஞான திரவியம் சிறப்புரை!

நெல்லை, ஜூன் 21-

நெல்லை கிழக்கு மாவட்டம் இராதாபுரம் தெற்கு ஒன்றியம் சார்பில் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் நாளை (22.06.2025 ஞாயிற்றுகிழமை) காலை 10 மணி அளவில் கூடங்குளம் அற்புதம் சாமுவேல் திருமண மண்டபத்தில் இராதாபுரம் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் எரிக் ஜூடு பாண்டியன் தலைமையில் எட்வின் வளன்அரசு,ச காய பிரபு,கேசவன், ரகுமான், சௌமியா ஜெகதீஸ்,அல்போன்ஸ், ஜான்சிரூபா, நடராஜன்,வின்சி மணியரசு, ஜோசப் ராஜேஷ், ஜான்சன், ஏசுதாஸ், அந்தோணி, மரியதாஸ், மோகன்தாஸ், அந்தோணி செல்வன், டென்சிங், குட்டம் கண்ணன், சத்தியபாலன், ஆனந்த், லிங்க தமிழரசன், பன்னீர்செல்வம், நவநீத கிருஷ்ணன், கண்ணன், தனபால், காட்வின் சூசை அந்தோணி, பரமசிவன், பொன் செல்வன், அந்தோணி, ஆல்ட்ரின், வினிங்டன், ஜேக்கப்,செல்வன், ஜெயலிங்கம், பெர்னார்டு, ஹெர்மஸ் உட்லின், ஜோசப் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது. மாவட்ட மீனவரணி தலைவர் சதீஷ் வரவேற்புரையாற்றுகிறார்.

இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், தலைமை செயற்குழு உறுப்பினர் முன்னாள் எம்.பி. சா.ஞானதிரவியம் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றுகின்றனர்.

நிகழ்வில் மாவட்ட அவைத்தலைவர் கிரகாம் பெல்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன், சித்திக், பிரபாகர பாண்டியன், மாவட்ட துணைச் செயலாளர்கள் நம்பி, மைக்கேல், தமயந்தி, பொருளாளர் ஜார்ஜ் கோசல், மாநில நிர்வாகிகள் ராஜம் ஜான்,ஆவின் ஆறுமுகம்,கணேஷ்குமார் ஆதித்தன், இராதாபுரம் தொகுதி பார்வையாளர் சிவராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் ராமச்சந்திரன், வேலங்குளம் கண்ணன், சாந்தி சுபாஷ், அபூபக்கர்,கணேசன், கனகராஜ், பரமசிவ ஐயப்பன் மற்றும் ஒன்றிய செயலாளர்கள்,நகர செயலாளர்கள்,பேரூர் செயலாளர்கள்,மாவட்ட அணி அமைப்பாளர்கள்,ஒன்றிய குழு உறுப்பினர்கள்,இராதாபுரம் தெற்கு ஒன்றிய நிர்வாகிகள்,ஊராட்சி மன்ற தலைவர்கள்,இராதாபுரம் தெற்கு ஒன்றிய கிளை செயலாளர்கள் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சி நிறைவில் கூடங்குளம் செ.சந்திரசேகர் நன்றியுரையாற்றுகிறார்.

கூட்ட ஏற்பாடுகளை இராதாபுரம் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் எரிக் ஜூடு பாண்டியன் செய்துள்ளார்.

### வாக்குப் பதிவு புகைப்படங்கள் - வீடியோ காட்சிகள்

# 45 நாட்களுக்கு மட்டும் பாதுகாத்து வைத்தால் போதுமானது!

## தேர்தல் ஆணையத்தின் புதிய விதிமுறை!

புதுடெல்லி, ஜூன் 21–

அண்மை காலமாக தேர்தல் மோசடி புகார்களுக்கு எதிராக, வேட்பாளர்கள் நீதிமன்றத்தை நாடுவது அதிகரித்துள்ளது. இதன் காரணமாக, தேர்தல் ஆணையம் புதிய, புதிய விதிமுறைகளை வெளியிட்டு வருகிறது. கடந்த ஆண்டு தேர்தலில் பதிவாகும் சிசிடிவி காட்சிகளை வேட்பாளர்களுக்கு வழங்கத் தேவையில்லை என்ற விதிமுறை கொண்டுவரப்பட்டது. இதனை எதிர்த்து காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் தொடர்ந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. சி.சி.டி.வி. காட்சிகளை பாதுகாப்பாக வைத்திருக்க உச்சநீதிமன்றம் அப்போது உத்தரவிட்டது. இதனிடையே, தேர்தலில் பதிவாகும் வீடியோ காட்சிகளை, புகைப்படங்களை 45 நாட்கள் மட்டும் மாநில தேர்தல் அதிகாரிகள் பாதுகாத்தால் போதும் என்று அனைத்து மாநில தேர்தல் அதிகாரிகளுக்கும் தேர்தல் ஆணையம் உத்தரவு பிறப்பித்துள்ளது. இது தொடர்பாக வகுக்கப்பட்ட புதிய விதிமுறைகள் கடந்த மே 30 ஆம் தேதி அனைத்து மாநில தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. முன்பு இந்த கால அளவு குறைந்தது 90 நாட்கள் என்று இருந்தது. பல்வேறு கட்டத் தேர்தல்களுக்கு ஏற்ப வாக்குப் பதிவு முதல், வாக்கு எண்ணிக்கை வரையிலான வீடியோ, புகைப்படக் காட்சிகளை 6 முதல் ஓராண்டு வரை பாதுகாக்கப்பட்டன. புகைப்படங்கள், வீடியோ காட்சிகள் சமூக ஊடகங்கள் உள்ளிட்ட பொதுவெளியில் தவறாக பயன்படுவதால் இந்த புதிய நடைமுறை கொண்டு வரப்படுவதாக தேர்தல் அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது தற்போது தெரியவந்துள்ளது.



‘ஓரணியில் தமிழ்நாடு’ என்ற தலைப்பில் தமிழ்நாடு முழுவதும் 234 தொகுதிகளில் ஒவ்வொரு பூத்திலும் தற்போது உள்ள மொத்த வாக்குகளில் 30%ம் அளவிற்கு உறுப்பினர்களை தி.மு.க.வில் உறுப்பினர்களாக சேர்த்திடும் திட்டத்தை தி.மு.க. தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்திட ஏதுவாக வேலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்களிடம் வழங்கினார். உடன் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி மற்றும் மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி (ம) பதிவுத்துறை வளாகத்தில், நேற்று (20.06.2025) வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, பதிவுத்துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 10 புதிய வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், மற்றும் பதிவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.